(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.4/2023 |
| Deposition Of Witness for | : | PW 1 |
| Name | : | அருண் பிரசாத் |
| Father's Name | : | நாகராஜன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27th December 2023.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சிவகங்கை மண்டலத்தில் மண்டல

மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் 12,09.2022 ம் தேதியிட்ட வழக்கு தொடர்வதற்கான ஒப்பளிப்பு ஆணை என்னால் வழங்கப்பட்டது. **நான் வழங்கிய ஒப்பளிப்பு ஆணை அ.த.சா.ஆ 1** ஆகும்.

2. நான் கடந்த 16,04.2022 முதல் சிவகங்கை மண்டலத்தில் மண்டல மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நெல் கொள்முதல் தொடர்பான பருவ கால பணிநியமனங்கள் செய்வதற்கான அதிகாரம் எனக்கு உள்ளது. என்னுடைய தலைமை அலுவலகத்திலிருந்து பார்வை எண் R.C.166/2021/TNCSC/SG, Dated 04.07.2022 லஞ்ச ஒழிப்பு தலைமை அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டதை குறிப்பிட்டு பருவகால பட்டியல் எழுத்தர் திரு. மகேஷ்வரன் என்பவருக்கு எதிராக குற்ற வழக்கு தொடர்வதற்கு ஒப்பளிப்பு ஆணை வழங்குவது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டது.

3. சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 4/2021 ன் ஆவணங்களை காவல் ஆய்வாளர் என்னிடம் ஒப்படைத்தார் அதனை நான் பரிசீலனை செய்தேன். அதில் முதல் தகவல் அறிக்கை, ஒப்படைப்பு மகஜர், கைப்பற்றுதல் மகஜர், பார்வை மகஜர் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை பரிசீலித்தேன்.

4. அந்த ஆவணங்களை பரிசீலனை செய்ததில் ஆஜர் எதிரி விவசாயி அருளானந்து என்பவரிடம் 190 நெல்மூட்டைகளும் அவரது மனைவி திருமதி. ஆரோக்கியமேரி என்பவரிடம் 180 நெல்மூட்டைகளும் ஆக மொத்தம் 370 மூட்டைகள் 10.04.2021 அன்று கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நெல்மூட்டைகளை கொள்முதல் செய்வதற்கு அரசால் வழங்கப்படும் பட்டியல் வழங்குவதற்கு லஞ்சப்பணம் ரூ. 16400/- அருளானந்து என்பவரிடம் கேட்டு பெற்றதாக ஆவணங்கள் மூலம் தெரிய வந்தது.

5. மேற்படி வழக்கு தொடர்பாக 12.09.2022 அன்று ஒப்பளிப்பு ஆணை வழங்கினேன். இது தொடர்பாக 25.11.2022 அன்று புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

<u>எதிரித் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. பருவகால பட்டியல் எழுத்தரை பணி நியமனம் செய்யும் அதிகாரம் எனக்கு உண்டு என்றால் சரிதான். என்னை புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்த போது எதிரியை பணிநியமனம் செய்யும் அதிகாரம் எனக்கு உண்டு என்று சொன்னேனா என்றால் சொன்னேன்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலைப் பார்வையிட்டேனா

என்றால் ஆமாம் பார்வையிட்டேன். எந்த தேதியில் பார்வையிட்டேன் என்றால் 12.09.2022 அன்று பார்வையிட்டேன். அது அசலா நகலா என்று தெரியவில்லை.

2. வழக்கு கோப்பு என்னுடைய தலைமை அலுவலகத்தில் இருந்து எந்த தேதியில் எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் 12.07.2022 அன்று ஒரு நினைவூட்டல் கடிதம் வரப்பெற்றது. மேற்படி நினைவூட்டல் கடிதத்திற்கு என்ன பதில் கொடுத்தேன் என்றால் 12.09.2022 இல் ஒப்பளிப்பு ஆணை வழங்கிவிட்டு அதன் நகலை இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் சென்னை அவர்களுக்கும் மற்றும் எங்களது நிர்வாக இயக்குநர் அவர்களுக்கும் அனுப்பி வைத்தேன்.

3. 12.07.2022 நினைவூட்டல் கடிதத்திற்கும் 12.09.2022 ஒப்பளிப்பு ஆணை வழங்கி தேதிக்கும் இடைப்பட்ட நாட்களில் நான் மேற்படி நினைவூட்டல் கடிதத்திற்கு பதில் ஏதாவது எனது தலைமை அலுவலகத்திற்கு அனுப்பினேனா என்றால் இல்லை. R.C.166/2021/TNCSC/SG, Dated 04.07.2022 கடிதத்திற்கு முன்பு எனக்கு எனது தலைமை அலுவலகத்தில் இருந்தோ அல்லது ஊழல் தடுப்பு இயக்குநரகத்தில் இருந்தோ ஏதாவது கடிதம் ஒப்பளிப்பு ஆணை

வழங்குவது குறித்து வந்ததா என்றால் எங்களது தலைமை அலுவலகத்திலிருந்து 05.05.2022 அன்று இந்த வழக்கு குறித்து ஒப்பளிப்பு ஆணை வழங்கியிருந்தால் அதன் விபரம் தெரிவிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

4. மேற்படி கடிதம் தொடர்பாக எனது தலைமை அலுவலகத்திற்கோ அல்லது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு இயக்குநகரகத்திற்கோ பதில் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி கடிதம் கிடைக்கப்பெற்றவுடன் சிவகங்கை லஞ்ச ஒழிப்பு போலீசாரை தொடர்பு கொண்டு வழக்கு கோப்புகளை கொண்டு வருமாறு சொன்னேனா என்றால் இல்லை நான் 16.04.2022 அன்று தான் தற்போது உள்ள பணியில் பொறுப்பேற்றேன். இவ்வழக்கு சம்பவ காலத்தில் நான் இங்கு பணியில் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சமயத்தில் இங்கு மண்டல மேலாளராக திருமதி. உமா மகேஷ்வரி என்பவர் இருந்தார்.

5. நான் இதற்கு முன்பு வேறு எந்த வழக்கிலும் ஒப்பளிப்பு ஆணை வழங்கியதில்லை. இது தான் முதல் வழக்கு ஆகும். ஒப்பளிப்பு ஆணை வழங்குவதை குறித்து மாதிரி ஒப்பளிப்பு ஆணை எதுவும் கொடுத்தார்களா என்றால் எனது தலைமை அலுவலகத்திலிருந்து மாதிரி ஒப்பளிப்பு

ஆணை அனுப்பப்பட்டிருந்தது. பொதுவாக, நெல் கொள்முதல் மையங்களில் அரசால் நெல் கொள்முதல் செய்யப்பட்டு மூட்டைகளாக போடப்பட்ட பிறகு அந்த மூட்டைகளை லாரிகளில் ஏற்றுவதற்கு ஏற்று கூலி, லாரி வாடகையை யார் கொடுப்பார்கள் என்றால் அரசு சார்பாக எங்கள் துறையில் இருந்து வழங்குவோம் .

6. மேற்படி கூலியை அவ்வப்போதே கொடுத்துவிடுவீர்களா என்றால் உடனடியாக கொடுக்க மாட்டோம். அந்த பரிவர்த்தனை முடிந்த பிறகு கொடுப்போம். அவ்வாறு கூலி வழங்குவதற்கு சுமாராக 1 வாரத்திலிருந்து 10 நாட்கள் ஆகுமா என்றால் பருவகால பட்டியல் எழுத்தர் முறையாக பட்டியலை சமர்ப்பிக்கும்பட்சம் உடனடியாக கூலி வழங்கப்படும் . காலதாமதம் ஆவதற்கு வாய்ப்பு உண்டு என்றால் பட்டியல் எழுத்தர் உடனடியாக பட்டியல் சமர்ப்பித்தால் உடனடியாக கூலி வழங்கப்படும்.

7. நெல் கொள்முதலுக்கான தொகையை அந்தந்த விவசாயிகளுக்கு நேரடியாக பணம் கொடுக்கப்படுமா அல்லது பட்டியல் எழுத்தர் மூலம் அந்தந்த விவசாயிகளுக்கு பணம் கொடுக்கப்படுமா என்றால் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். ஏற்றுக்கூலி மற்றும் வண்டி வாடகை எவ்வாறு வழங்கப்படும் என்றால்

ஏற்றுக்கூலியானது பருவகால பட்டியல் எழுத்தரால் அளிக்கப்படும் பட்டியலின் அடிப்படையில் கொள்முதல் அலுவலரின் சான்றொப்பம் பெறப்பட்டு அந்த தொழிலாளரின் வங்கி கணக்கில் செலுத்தப்படும், லாரி வாடகையானது ஒப்புகை படிவங்கள் பெறப்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட லாரி ஒப்பந்ததாரர்களுக்கு அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

8. கொள்முதல் நிலையத்திற்கு கொள்முதல் செய்யப்பட்ட பிறகு பட்டியல் எழுத்தர் மூலம் தனியார் வாகனங்களில் தனியாக தொழிலாளர்களை வைத்து காலதாமதத்தை தவிர்ப்பதற்காக நெல் மூட்டைகளை ஏற்றிஅனுப்பலாமா என்றால் முறையாக அனுமதி இல்லாமல் அவ்வாறு செய்ய இயலாது. மழைக்காலமாக இருந்தால் கொள்முதல் அலுவலர் மூலம் மண்டல மேலாளரிடம் அனுமதி பெற்று அவ்வாறு செய்யலாம். நான் தவறுதலாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. காவல் ஆய்வாளரை எந்ததேதியில் நான் வரச் சொன்னேன் என்றால் நான் வரச் சொல்லவில்லை அவர்களாகத்தான் வந்தார்கள். தேதி சரியாக ஞாபகமில்லை. சாட்சி தற்போது காவல் ஆய்வாளர் 12.09.2022 அன்று ஆவணங்களுடன் வந்து தன்னை பார்த்ததாக கூறுகின்றார். நான்

முதல் விசாரணையில் கூறியுள்ள *"அருளானந்து என்பவரிடம் 190 நெல்மூட்டைகளும் அவரது மனைவி திருமதி. ஆரோக்கியமேரி என்பவரிடம் 180 நெல்மூட்டைகளும் ஆக மொத்தம் 370 மூட்டைகள் "* என்ற விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் ஆய்வாளர் கேட்கும்போது என்னிடம் இருந்த ஆவணங்களை நான் கொடுத்துவிட்டேன்.

10. முதல் தகவல் அறிக்கையில் அருளானந்து என்பவரிடமிருந்து 540 நெல்மூட்டைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் எங்களது ஆவணங்களில் *"அருளானந்து என்பவரிடம் 190 நெல்மூட்டைகளும் அவரது மனைவி திருமதி. ஆரோக்கியமேரி என்பவரிடம் 180 நெல்மூட்டைகளும் ஆக மொத்தம் 370 மூட்டைகள் "* என உள்ளது பற்றி மனநிறைவு எனக்கு ஏற்பட்டதா என்றால் 540 என்ற எண்ணிக்கையில் எனக்கு மனநிறைவு இல்லை ஆனால் எனது ஆவணங்களில் 370 மூட்டைகள் என்று உள்ளதால் விவசாயி அருளானந்து நெல் கொள்முதல் மையத்திற்கு நெல் மூட்டைகளை கொண்டு வந்துள்ளார் என்பது தெரிய வந்தது.

11. ஒப்பளிப்பு ஆணையில் நெல்மூட்டைகளின் எண்ணிக்கை குறித்து வேறுபாடு உள்ளது பற்றி நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது ஒப்பளிப்பு ஆணையில் 540 நெல்மூட்டைகள் என்று எதனடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சாட்சிகள் போனில் எதிரியை தொடர்பு கொண்டு 540 மூட்டைகள் போடவேண்டும் என்று கேட்டதாக என்னிடம் கொடுக்கப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்களில் குறிப்பிடப்பட்டிருந்ததின் அடிப்படையில் நான் 540 மூட்டைகள் என்று குறிப்பிட்டுள்ளேன். என்னிடம் உள்ள ஆவணங்களின் படி 540 மூட்டைகள் என்பது சரியா தவறா என்றால் சரிதான். நான் எதிரியையோ மற்ற சாட்சிகளையோ எனது அலுவலகத்திற்கு வரச் சொல்லி விசாரித்தேனா என்றால் இல்லை.

12. எனக்கு தலைமை அலுவலகத்தி்லிருந்து மாதிரி ஒப்பளிப்பு ஆணை எதுவும் வரவில்லை என்றும் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திலிருந்து ஒரு மாதிரி ஒப்பளிப்பு ஆணை எனக்கு வழங்கப்பட்டு அதனடிப்படையில் நான் மனநிறைவு அடையாமலும் இயந்திரத்தனமாகவும் போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஒப்பளிப்பு ஆணை வழங்கியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>அரசுத்தரப்பில் மறுவிசாரணை</u>:

1. என்னிடம் காட்டப்படும் அருளானந்து மற்றும் அவரது மனைவி ஆரோக்கியமேரி ஆகியோரின் பெயரில் உள்ள விற்பனை ரசீது எங்கள் துறையால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதில் 10.04.2021 ம் தேதியிட்டு அருளானந்து பெயரில் ஒரு ரசீதும் அதில் 190 நெல்மூட்டைகள் கொள்முதல் செய்ததாகவும் அவரது மனைவி ஆரோக்கியமேரி என்பவர் பெயரில் 10.04.2021 ம் தேதியிட்டு 170 நெல் மூட்டைகளுக்கான ஒரு ரசீதும் 180 நெல்மூட்டை கொள்முதல் செய்ததற்கான மற்றொரு ரசீதும் ஆக மொத்தம் 3 ரசீதுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ரசீதுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நெல்மூட்டைகளின் எண்ணிக்கையை கணக்கிட்டால் மொத்தம் 540 மூட்டைகள் வருகிறது என்றால் சரிதான். என்னை காவல் ஆய்வாளர் 12.09.2022 அன்று சந்தித்து ஆவணங்களை ஒப்படைத்த போது மேற்படி 3 ரசீதுகளையும் காண்பித்தார் என்றால் சரிதான். மேற்படி 3 ரசீதுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள நெல்மூட்டைகளின் கூட்டுத்தொகையான 540 நெல்மூட்டைகளைத்தான் ஒப்பளிப்பு ஆணையில் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

**<u>எதிரித் தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1. நான் மேற்படி 3 ரசீதுகளையும் பார்த்திருந்தால் நான் முதல் விசாரணையில் 370 மூட்டைகள் என்று சொல்லியிருக்க மாட்டேன் என்றால் ரசீதுகள் சிறிய அளவில் ஒரே மாதிரியாக இருந்ததாலும் நான் சரியாக பார்க்கவில்லை. மேற்படி 3 ரசீதுகளிலும் விவசாயியின் கையெழுத்தோ பில் கிளர்க்கின் கையெழுத்தோ இல்லை என்றால் சரிதான். மேற்படி ரசீதுகள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2023.12.27 18:21:29 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.